ஆளுநர் மாளிகை மீது பெட்ரோல் குண்டு வீசிய வழக்கு

கருக்கா வினோத்துக்கு 10 ஆண்டுகள் சிறை

பூந்தமல்லி என்ஐஏ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு

சென்னை, நவ. 13: ஆளுநர் மாளிகை மீது பெட்ரோல் குண்டு வீச்சு வழக்கில் கைது செய்யப்பட்ட கருக்கா வினோத்துக்கு 10 ஆண்டுகள் தண்டனை விதித்து பூந்தமல்லி என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

சென்னை கிண்டி சர்தார் படேல் சாலையில் ஆளுநர் மாளிகை உள்ளது. ஆளுநர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் செல்லும் ஒன்றாம் எண் நுழைவாயில் முன்பு கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 25ம் தேதி பெட்ரோல் குண்டு வீசப்பட்டது.

இது தொடர்பாக அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த காவலர்கள் பெட்ரோல் குண்டு வீசிய வினோத் என்ற கருக்கா வினோத் என்பவரை பிடித்து விசாரித்தார். அப்போது வெடிக்காத நிலையில் இரண்டு பெட்ரோல் குண்டுகள் கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வழக்கு சென்னை அடுத்த பூந்தமல்லியில் உள்ள வெடிகுண்டு வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, விசாரணை நடந்து வந்தது. என்ஐஏ விசாரணை முடிவடைந்த நிலையில், கருக்கா வினோத்திற்கு எதிராக, இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் வெடிபொருட்கள் தடுப்புச் சட்ட பிரிவின் கீழ் சுமார் 680 பக்கம் கொண்ட குற்ற பத்திரிகை கடந்த ஆண்டு ஜனவரியில் தாக்கல் செய்யப்பட்டது.

என்.ஐ.ஏ தரப்பில் வழக்கறிஞர் என்.பாஸ்கரன் ஆஜராகி குற்றம் சாட்டப்பட்ட வினோத் தான் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார். உள்நோக்கத்துடன் தலைவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளார். எனவே, அவருக்கு அதிக பட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி எஸ்.மலர்விழி, குற்றச்சாட்டுகள் போதிய ஆதாரங்கள் மற்றும் சாட்சியங்களுடன் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் வினோத் என்ற கருக்கா வினோத்துக்கு 10 ஆண்டு சிறை தண்டனையும் ரூ.5000 அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் திடீர் சந்திப்பு

திருச்சி முதல் மதுரை வரை வைகோ மீண்டும் நடைபயணம்

நடைபயணத்தை தொடங்கி வைக்க அழைத்ததாக பேட்டி

சென்னை, நவ.13: திருச்சி முதல் மதுரை வரை மீண்டும் நடைபயணம் தொடங்க உள்ள நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலினை வைகோ நேரில் சந்தித்தார். அவருக்கு முதல்வர் வாழ்த்து தெரிவித்தார். நடைபயணத்தை தொடங்கி வைக்க முதல்வருக்கு அழைப்பு விடுத்ததாக வைகோ கூறினார்.

மீண்டும் வைகோ 'சமத்துவ நடைபயணம்' மேற்கொள்ள இருக்கிறார். திருச்சியில் இருந்து ஜனவரி 2ம்தேதி வைகோவின் சமத்துவ நடைபயணம் மதுரை நோக்கி தொடங்குகிறது. போதைப் பொருளுக்கு எதிராவும், தமிழக சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணி வெற்றிக்காகவும் மேற்கொள்ளப்படும் இந்த நடைபயணம், மணப்பாறை-திண்டுக்கல் வழியாக மதுரையை சென்றடையும்.

இதை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை, வைகோ நேற்று சந்தித்து பேசினார். அப்போது அவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்தார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, மதிமுக பொதுச்செயலாளர் வைகோ சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்புக்கு பின்னர் வைகோ நிருபர்களிடம் கூறியதாவது:

பள்ளி, கல்லூரி மாணவர்களை போதை பொருட்களில் இருந்து தடுப்பதற்கான சமத்துவ நடைப்பயணத்தை வரும் ஜனவரி 2ம்தேதி திருச்சி மாநகரில் இருந்து தொடங்க உள்ளேன். வரும் சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணி மகத்தான வெற்றி பெறவும் ஒவ்வொரு கிராமமாக சென்று மக்களை சந்திக்க உள்ளேன்.

இந்த நடைபயணத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

மதுரையில் முடியும் நடைபயணத்தில், தமிழக காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, சிபிஐ, சிபிஎம் மற்றும் விடுதலை சிறுத்தை கட்சி உள்ளிட்ட பல்வேறு கட்சி தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள்.

கே.என்.நேரு, சேகர்பாபு, அன்பில் மகேஷ்

3 அமைச்சர் வீடுகளுக்கு குண்டு மிரட்டல்

சென்னை, நவ. 13: தமிழக அமைச்சர்கள் நேரு, சேகர்பாபு, அன்பில் மகேஷ் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதையடுத்து போலீசார் நேற்று தீவிர சோதனை மேற்கொண்டனர்.

சென்னை ஓட்டேரி செல்லப்பா தெருவில் வசித்து வரும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபுவின் வீட்டில் வெடிகுண்டு இருப்பதாக மிரட்டல் விடுத்து மர்ம நபர் ஒருவர் தமிழக டிஜிபி அலுவலகத்திற்கு இ-மெயில் அனுப்பினார். இதுகுறித்து தகவல் அறிந்த ஓட்டேரி இன்ஸ்பெக்டர் ரமேஷ் மற்றும் போலீசார் அமைச்சரின் வீட்டிற்கு விரைந்து சென்றனர். மேலும், வெடிகுண்டு நிபுணர்கள் குழுவைச் சேர்ந்த தலைமை காவலர ரமேஷ் மற்றும் குழுவினர் மெட்டல் டிடெக்டர் கருவி மூலம் வீடு முழுவதும் சோதனை மேற்கொண்டனர். வெடிகுண்டுகளை கண்டறியும் ரூடி என்ற மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு தீவிர சோதனை நடத்தினர். நீண்டநேர சோதனையின் முடிவில் இ-மெயிலில் வந்த வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரியவந்தது. இதேபோல், டிஜிபி அலுவலகத்துக்கு, திருச்சியில் உள்ள அமைச்சர்கள் கே.என். நேரு, அன்பில் மகேஷ் மற்றும் திருச்சி என்ஐடி கல்லூரி மகளிர் விடுதி, சத்திரம் பேருந்து நிலையத்தில் உள்ள தனியார் கல்லூரி ஆகிய இடங்களில் வெடிகுண்டுகள் வைக்கப்பட்டுள்ளது என்று டிஜிபி அலுவலகத்துக்கு இ-மெயில் வந்தது. இதைத்தொடர்ந்து திருச்சி தில்லைநகர் 6வது கிராசில் உள்ள அமைச்சர் கே.என். நேரு வீடு, தென்னூர் அண்ணா நகரில் உள்ள அமைச்சர் அன்பில் மகேஷ் ஆகியோரது வீடுகளில் வெடிகுண்டு நிபுணர்கள் சோதனையிட்டனர். இதுவும் புரளி என தெரிந்தது.

அமைச்சர் சேகர்பாபு வீட்டில் மோப்ப நாய் உதவியுடன் வெடிகுண்டு சோதனை நடத்தும் போலீசார்.

மாஜி அமைச்சர் வீட்டிலும் சோதனை: புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில் அதிமுக முன்னாள் அமைச்சர் விஜயபாஸ்கர் வீட்டில் குண்டு வெடிக்கும் என்றும் இ-மெயில் மிரட்டல் வந்தது. சோதனையில் அதுவும் புரளி என தெரிந்தது. போலீசார் விசாரிக்கின்றனர்.

ரம்யா கிருஷ்ணன், சின்மயிக்கும் வெடிகுண்டு மிரட்டல்

ஆழ்வார்பேட்டையில் உள்ள நடிகை ரம்யா கிருஷ்ணன் மற்றும் பாடகி சின்மயி வீடுகள் மற்றும் ஆர்.ஏ.புரத்தில் உள்ள முன்னாள் ஐஏஎஸ் அதிகாரி கிரிஜா வைத்தியநாதன், பாஜ பிரமுகர் அமர்பிரசாத் ரெட்டி வீடுகளில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக நேற்று டிஜிபி அலுவலகத்துக்கு இமெயில் வந்தது. அங்கு சென்றும் போலீசார் சோதனையிட்டனர். அதுவும் புரளி என தெரிந்தது. இதுதொடர்பாகவும் போலீசார் வழக்குப் பதிந்து விசாரித்து வருகின்றனர்.

'தேசிய தலைவர் தேவர் பெருமான்'

படத்துக்கு தடை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு

சென்னை, நவ. 13: தேசிய தலைவர் தேவர் பெருமான் திரைப்படத்திற்கு தடை விதிக்க கோரிய பொது நல வழக்கின் விசாரணையை அடுத்த வாரத்திற்கு தள்ளி வைத்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பசும்பொன் முத்துராமலிங்க தேவர் வாழ்க்கை வரலாற்று திரைப்படமான தேசிய தலைவர் தேவர் பெருமான் படத்தை தடை செய்யக் கோரி சத்திரிய சான்றோர் படை நிறுவன தலைவர் ஹரி நாடார் சென்னை உயர் நீதிமன்றத்தில் பொதுநல மனு தாக்கல் செய்துள்ளார். அவர் தாக்கல் செய்த மனுவில், கடந்த அக்டோபர் 30ம் தேதி வெளியான தேசிய தலைவர் தேவர் பெருமான் திரைப்படத்தில் முன்னாள் முதல்வர் காமராஜர் குறித்து எந்த ஆதாரங்களும் இல்லாமல், அவமதிக்கும் வகையில் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 1936ம் ஆண்டு விருதுநகர் நகராட்சி தேர்தலில், ஆடு வாங்கிக் கொடுத்து, வரி செலுத்தி, காமராஜர் போட்டியிட தேவர் உதவியதாக காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. உண்மைக்கு புறம்பான இந்த தகவல் ஏழாம் வகுப்பு பாடத்தில் இடம் பெற்றிருந்தது. அதை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் 2019ம் ஆண்டு இந்த பகுதிகளை நீக்கியது. தமிழ்நாட்டில் தனது ஆட்சி காலத்தில் 19 அணைகளை கட்டி, நீர்பாசனத் துறையில் புரட்சி ஏற்படுத்தியவர் காமராஜர். பல்வேறு இடங்களில் தொழிற்பேட்டைகளை அமைத்ததுடன், 1,200 பள்ளிகளை தொடங்கி, மதிய உணவு திட்டத்தை கொண்டு வந்தவர்.

காமராஜர் பற்றி உண்மைக்கு மாறான காட்சி இருப்பதாக குற்றச்சாட்டு

விசாரணை தள்ளிவைப்பு

இந்நிலையில், இருசமூகத்தினரிடையே மோதலை ஏற்படுத்தும் வகையில், காமராஜரை தவறாக சித்தரித்து காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, தேசிய தலைவர் தேவர் பெருமான் படத்திற்கு தடை விதிக்குமாறு உத்தரவிட வேண்டும் என்று கோரி இருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், மனு மீது விளக்கம் தருமாறு அரசு தரப்புக்கு உத்தரவிட்டு, விசாரணையை அடுத்த வாரத்திற்கு தள்ளி வைத்தனர்.

நிதி மோசடி வழக்கில் ஜாமீன் உத்தரவாதத்தை நிறைவேற்றாததால்

தேவநாதனை கைது செய்ய வேண்டும்

சென்னை சிறப்பு நீதிமன்றம் உத்தரவு

சென்னை, நவ. 13: சென்னை திமயிலாப்பூர் இந்து பெர்மனெட் பண்ட் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்த நூற்றுக்கு மேற்பட்ட முதலீட்டாளர்களிடம் பல கோடி ரூபாய் மோசடி செய்ததாக தொடரப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்ட நிதி நிறுவனத்தின் இயக்குனர் தேவநாதன் உள்ளிட்டோர் மூன்றாவது முறையாக ஜாமீன் மனு தாக்கல் செய்திருந்தனர். மனுவை விசாரித்த நீதிபதி ஜி.ஜெயச்சந்திரன் அக்டோபர் 30ம் தேதி வரை இடைக்கால ஜாமீன் வழங்கி உத்தரவிட்டார்.

மேலும் ரூ.100 கோடியை விசாரணை நீதிமன்றத்தில் வைப்புத்தொகையாகச் செலுத்த வேண்டும். அவர் விசாரணைக்குத் தேவையான போது ஆஜராக வேண்டும், சாட்சிகளை கலைக்கக்கூடாது மற்றும் வேறு எங்கும் செல்லக்கூடாது போன்ற நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கு மீண்டும் நீதிபதி கே.ராஜசேகர் முன்பு விசாரணைக்கு வந்த போது, தேவநாதன் யாதவ் சரணடைய மேலும், ஒரு வாரம் அவகாசம் வழங்கினார்.

மேலும், ஏற்கனவே இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜெயசந்திரன் முன்பு வழக்கை பட்டியலிட பதிவுத்துறைக்கு உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்திருந்தார்.

இந்த நிலையில் இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நலன் பாதுகாப்பு சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது.

அப்போது முதலீட்டாளர்கள் சங்கம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆர். திருமூர்த்தி மனு ஒன்றை தாக்கல் செய்து வாதிட்டார். அதில், சென்னை உயர்நீதிமன்றம் விதித்த எந்த ஜாமீன் நிபந்தனைகளையும் தேவநாதன் யாதவ் நிறைவேற்றவில்லை. சென்னை உயர்நீதிமன்ற விதித்த காலக்கெடுவுக்குள் நூறு கோடி ரூபாய் வைப்புத் தொகை செலுத்தவில்லை, சரணடையவில்லை. மேலும் ஜாமீன் நிபந்தனைகளை நிறைவேற்றாத காரணத்தால் அது குறித்தும் வழக்கு பதிவு செய்து விசாரிக்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரினார்.

மனுவை விசாரித்த நீதிபதி முருகானந்தம் ஜாமீன் நிபந்தனைகளை நிறைவேற்றாததால் அவரை உடனடியாக காவல்துறை கைது செய்ய வேண்டும்.

மேலும் ஜாமீன் நிபந்தனை நிறைவேற்றாததால் அது குறித்தும் காவல்துறை வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்த வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்.

பொதுக் கணக்குக் குழுவுடன் ஆய்வுக்கு

தூத்துக்குடி வந்த அதிகாரி உயிரிழப்பு

தூத்துக்குடி, நவ. 13: தமிழ்நாடு சட்டப்பேரவையின் 2024-26ம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழு, அதன் தலைவரான செல்வப்பெருந்தகை எம்எல்ஏ தலைமையில், தூத்துக்குடி மாவட்டத்தில் வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து நேற்று (12ம் தேதி) ஆய்வுப் பயணம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு இருந்தது.

இந்த குழுவுடன் நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் தூத்துக்குடிக்கு வருகை தந்த தமிழக சட்டசபை இணைச் செயலர் ரமேஷ்(57) என்பவருக்கு திடீரென உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

இதையடுத்து தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவரை, சபாநாயகர் அப்பாவு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதா ஜீவன், குழுவின் தலைவரான செல்வப்பெருந்தகை, எம்எல்ஏக்கள் ஊர்வசி அமிர்தராஜ், ரூபி மனோகரன் ஆகியோர் மருத்துவமனைக்கு வந்து நலம் விசாரித்தனர். இதைத் தொடர்ந்து நேற்று நடைபெற இருந்த பொதுக் கணக்கு குழுவின் ஆய்வுப் பணி ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் அவர், நேற்று மாலை தீவிர சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து அவரது உடல் சென்னைக்கு கொண்டு செல்லப்பட்டது.

தமிழகத்தில் 162 பேர் வெற்றி பெற்று சாதனை...

முதல் பக்க தொடர்ச்சி

நாங்கள் சிறப்பு நேர்முகத் தேர்வு வழிகாட்டும் திட்டம் நடத்த உள்ளோம். அவர்களுக்கு பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற ஐஏஎஸ், ஐபிஎஸ், ஐஎப்எஸ் அதிகாரிகள், பிரபல பேராசிரியர், துறை நிபுணர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர்.

மெயின் தேர்வில் தேர்ச்சி பெற்றோருக்கு அடுத்த கட்டமாக நேர்முக தேர்வு டெல்லியில் உள்ள யுபிஎஸ்சி அலுவலகத்தில் நடைபெறும். இதில் தேர்ச்சி பெறுவோருக்கு, அவர்கள் பெற்ற மதிப்பெண், இடஒதுக்கீடு அடிப்படையில் பணிகள் ஒதுக்கப்படும். யாருக்கு என்ன பதவி என்பது அதன் பிறகுதான் தெரிய வரும். பதவிகள் ஒதுக்கப்பட்டவர்களுக்கு முசோரியில் உள்ள பயிற்சி மையத்தில் பயிற்சி வழங்கப்படும்.

இவ்வாறு வைஷ்ணவி கூறினார்.

தமிழ்நாடு அரசு
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை-28
திருத்திய அறிவிப்பு

முதலமைச்சரின் தூய்மைப் பணியாளர்களுக்கான உணவு வழங்கும் திட்டத்தில் உணவு கலன் (stainless steel Tiffin box) மற்றும் அதற்குரிய வெப்ப காப்பிடப்பட்டபை (Insulated Thermal Carrying Bag) வழங்கும் உற்பத்தியாளர் / விநியோகிப்பாளர் / விற்பனையாளர் (Manufacturer / Supplier / Vendor) தேர்ந்தெடுப்பதற்கான ஒப்பந்தப்புள்ளி ந.க.எண்.29143/2025/எச்3, நாள் : 05.11.2025 **பணியின் திருத்திய திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.97 கோடி.**

செமதொஇ/6114/ஒப்பந்தப்புள்ளி/2025 — நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை – 28

கோயம்புத்தூர் மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண். EOI(3)/2025 நாள்.12.11.2025
(இரு உறைகள் முறை -இணையதளம் வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

1. BOT அடிப்படையில் ஐந்து மண்டலத்திற்குட்பட்ட பேருந்து நிழற்குடை கட்டுதல் மற்றும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகள் விருப்ப கேட்பு அறிக்கை - ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைகள் முறையில் வரவேற்கப்படுகின்றன.
2. ஒப்பந்தப்புள்ளியினை https://tntenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இந்த இணையதள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த முழு விபரங்களையும் பெறலாம்.
3. முன் வைப்பு தொகை - **ரூ.4,00,000/-** தொகை (ஒரு மண்டல பணி வீதம்) இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.
4. ஆவணம் கட்டணம் - **ரூ.10,000/-** தொகை (ஒரு மண்டல பணி வீதம்) இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்
5. **இப்பணி சம்பந்தமான நாள் மற்றும் நேரம்**
   அ) ஒப்பந்தப்புள்ளிக்கு முன் கலந்தாய்வு கூட்டம் : **24.11.2025 காலை 11.00 மணி**
   ஆ) ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்தல் : **02.12.2025 மாலை 3.00 மணி வரை**
   இ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : **02.12.2025 மாலை 3.00 மணி வரை**
   ஈ) தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : **03.12.2025 மாலை 4.00 மணி**
6. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும்.
7. ஆணையாளர், கோவை மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர்-641001. **தொலைபேசி எண். 0422-2396026. Email: commr.coimbatore@tn.gov.in**

ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.
செ.ம.தொ.இ./6117/ஒப்பந்தப்புள்ளி/2025

கோயம்புத்தூர் மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். e57/2025 நாள்.12.11.2025
CRRT மற்றும் பொது நிதியின் கீழ் (Two Cover System)

1. கோயம்புத்தூர் மாநகராட்சி செம்மொழிப் பூங்காவிற்கு கூடுதல் அபிவிருத்தி பணிகளுக்கு CRRT and பொது நிதியின் கீழ் ஒப்பந்தப்புள்ளிகள் இரு உறைகள் முறையில் வரவேற்கப்படுகின்றன.
2. மொத்த மதிப்பீட்டுத் தொகை **ரூ.47.11 கோடி.**
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tenders.gov.in என்ற இணையதள முகவரிகளிலிருந்து இலவசமாக இறக்கம் செய்து கொள்ளலாம்..
4. இப்பணிகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை கோயம்புத்தூர் மாநகராட்சி அலுவலகத்தில் பெறலாம்.
5. **இப்பணி சம்பந்தமான நாள் மற்றும் நேரம்**
   அ) ஒப்பந்தப்புள்ளிக்கு முன் கலந்தாய்வு கூட்டம் : **17.11.2025 காலை 11.00 மணி**
   ஆ) ஒப்பந்த நமுனா பதிவிறக்கம் செய்தல் : **21.11.2025 மாலை 3.00 மணி**
   இ) ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : **21.11.2025 மாலை 3.00 மணி**
   ஈ) தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல் : **21.11.2025 மாலை 4.00 மணி**
6. ஒப்பந்தப்புள்ளி பெறப்படும் நாளன்று அலுவலகத்திற்கு விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டிருப்பின் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் அதே இடத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு திறக்கப்படும். ஆணையாளர், கோவை மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர்-641001. **தொலைபேசி எண். 0422-2396026. Email: commr.coimbatore@tn.gov.in**

ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி.
செ.ம.தொ.இ./6118/ஒப்பந்தப்புள்ளி/2025

திருப்பூர் மாநகராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
(ந.க.எண். 360/2025-26/Z2/EE, TCMC, நாள் : 10.11.2025)

1. திருப்பூர் மாநகராட்சியில் பொது நிதி 2025-26ன் கீழ் மண்டலம் 2ல் 2 எண்ணிக்கையிலான பிரதான சாலையை சீரமைக்கும் பணிக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.
2. ஒப்பந்தப்புள்ளி மதிப்பு **ரூ.190.00 இலட்சம்.**
3. ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான விபரங்களை https://tntenders.gov.in இணையதள முகவரியில் பார்வையிடலாம். (ஒப்பந்ததாரர்களின் முன் கலந்தாய்வு கூட்ட நாள் : 20.11.2025)
4. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை https://tntenders.gov.in இணையதள முகவரியில் 13.11.2025 முதல் 28.11.2025 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
5. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் 28.11.2025 அன்று மாலை 3.00 மணி வரையில்.
6. ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 28.11.2025 அன்று மாலை 3.30 மணி.
7. ஒவ்வொரு பணியின் மதிப்பீட்டுத் தொகை மற்றும் டேவணித் தொகை, ஒப்பந்ததாரருக்கான தகுதி உள்ளிட்ட விபரங்களை ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தின் மூலம் அறியவும்.

ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி
செ.ம.தொ.இ/6110/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை
சேலம் மாவட்டம்
ந.க.எண். 6065/2025/அ2 நாள் : 11.11.2025
முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம் அமைத்தல் 2025-2026
சங்ககிரி சட்டமன்ற தொகுதி சிறு விளையாட்டு அரங்கம் அமைத்தல் பணி, சேலம் மாவட்டம்
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர் அவர்களால் சங்ககிரி சட்டமன்ற தொகுதி சிறு விளையாட்டு அரங்கம் அமைத்தல் பணிகளை மேற்கொள்ள, மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில், இலவசமாக 13.11.2025 முதல் 27.11.2025 வரையிலான காலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.
4. அ) மின் ஒப்பந்தப் படிவம் பதிவிறக்கம் செய்ய மற்றும் : 13.11.2025 முதல் 27.11.2025
   சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : மாலை 3.00 மணி வரை
   ஆ) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 27.11.2025 மாலை 4.00 மணி

மாவட்ட ஆட்சித் தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, சேலம்.
செ.ம.தொ.இ./ 6105 /ஒப்பந்தப்புள்ளி/2025

க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்
(முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது)
பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா – 411014
பிற்சேர்க்கை IV(விதி 8 (1) ஐ காண்க) சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்துக்கான)

இவ்வாறுக்க, கீழே கையொப்பமிட்டவர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (முன்னதாக பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவாலா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது. முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது, முதலில் ஜிஇ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும். மேலே குறிப்பிடப்பட்ட கார்ப்பரேட்/ பதிவு அலுவலகத்தின் அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (இதன் பின் "கூறப்பட்ட சட்டம்" என்று குறிப்பிடப்படும்) கீழ் மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள் 2002 இன் விதி 3 உடன் சட்டத்தின் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் ஒரு கோரிக்கை அறிவிப்பு வழங்கி கீழ்குறிப்பிட்ட கடன்தாரர்களை அறிவிப்பில் குறிப்பிட்ட தொகையை மேற்கூறிய அறிவிப்பு கிடைக்கப் பெற்ற தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்கள் தொகையை திருப்பி செலுத்தத் தவறியுள்ளார். கீழே கையொப்பமிட்டவர் கடன்தாருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிப்பினை வழங்கி, கடனீட்டுக் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 சொல்லப்பட்ட விதிகளில் விதி 8 உடன் பிரிவு 13(4) கீழ் அவருக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி இங்கே கீழே விவரிக்கப்பட்ட சொத்தினை 07, நவம்பர் 2025 தேதியன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், சொத்துடன் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள கூடாது. சொத்துடனான எந்தவொரு நடவடிக்கையும் கடனீட்டுக் கடனீந்தோருக்குச் சேர வேண்டிய தொகை மற்றும் அதற்கான வட்டியுடன் தொடர்புடையதாகும். கடன்தாரர் மேற்கூறப்பட்ட சட்டத்தின் பிரிவு 13 மற்றும் துணைப் பிரிவு (8) இல் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்துகளை மீட்பதற்குத் தரப்பட்டுள்ள கால அவகாசத்தைத் தெரிந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சுவாதீனம் செய்யப்பட்டுள்ள சொத்துகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| வ. எண் | கடன